செ.வெ.எண் : 13/ ஜூலை நாள் : 10.07.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## சமூகநலத் துறையில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக பணி வாய்ப்பு.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையம்(One Stop Centre) என்ற அமைப்பு மாவட்ட அரசு பொது மருத்துவமனை வளாகத்திற்குள் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் தொகுப்பூதிய ஒப்பந்த அடிப்படையிலான கீழ்காணும் பணிக்கு தகுதியான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பதவியின் பெயர் | காலிப்பணியிடம் | கல்வித்தகுதி | வழங்கப்படும் (தொகுப்பூதியம்) |
|---|---|---|---|---|
| 1. | விசாரணை பணியாளர் (Case Worker) | 1 | Bachelor Degree in Social work, Sociology, Psychological Counselling or Development management with a minimum of 1year experience<br>Master Degree may also apply | 15,000/- |

- விண்ணப்பதாரர்கள் பெண்ணாக இருத்தல் வேண்டும்.
- இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
- 24 மணிநேரம் சுழற்சி முறையில் பணியாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் வழங்க வேண்டிய முகவரி மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியரக வளாகம், இராமநாதபுரம். விண்ணப்பங்களுக்கான கடைசி நாள்:15.07.2021

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**